SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram : "GUARDIAN" JAFFNA. Telephone : No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

70-ம் புத்தகம் 39-ம் இல. யாழ்ப்பாணம் 1945-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 12-ந் திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 5

## அர்ச். தொமஸ் மோறப்பர் சரிதை

### VIII புதல்வர்க்குக் கடிதங்கள்

இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;
மிக்கஅறமே விழுத்துணை ஆவது
—மணிமேகலை

தொமஸ்மோறு அரசனுடனேயே அதிக நேரம் கழிக்கநேர்ந்ததால், தாம் கண்மணிபோல் காத்துவந்த தம் மக்களை மாதத்திற் கொருமுறை வரையிலேதான் தமது இல்லத்திற்போய்க்கண்டு அவர்களோடு அளவளாவக் கிடைத்திருந்தது. பலகால் தம்மக்களைப் பிரிந்திருக்கவேண்டி வந்தமையினாலேதான் அவர்களுக்கு மாத்திரமல்ல மறுபேருக்கும் இன்றைக்கு இன்பம்பயக்குகின்ற அநேக நிருபங்களை வரைந்துள்ளார். வேதசாட்சியின் கரத்தினால் வரைந்து[illegible]டிக்கப்பெற்ற இக்காகிதங்களின் வசீகரமான பரிமளவாசனை நானூறுவருடங்கள் சென்றும் இன்னும் அப்படியே கமழ்ந்துகொண்டிருக்கின்றது.

அவர் தமது அரசியல் கடமைகளின் நெருக்கம் இரைச்சல் ஆதியவைகளின் மத்தியிலேயும் தம் மகார்க்கு நிருபம்விடுக்கவும் அவர்களிடமிருந்து கிடைத்த விடைகளிலுள்ள லத்தீன் பிழைகளைத் திருத்தவும் சமயங்கண்டுகொள்ளுவார். தொந்தரையும் விசாரமுமுள்ள கருமங்கள்நடுவில் தம் மக்கள்விடுத்த காகிதங்களால் தாம் மிகஆறுதல் அடைந்துகொண்டுவந்ததாக அவர்களுக்கு எழுதினர். மக்கள் அவரது மலர்ந்தமுகத்தைக்காணும் அக்களிப்பே அவர்களுக்கு போதிய ஒரு உபகாரமாயிருக்க அவரோ தமது மனையை நோக்கிப் போம்போதெல்லாம் பிள்ளைகளுக்கு ஏதாவது உபகாரம் கொண்டுபோகாமல்விடார்.

அக்காலத்தில் 'அடியாதகாடுபடியாது' என்ற கொள்கை இங்கிலாந்திலே மிகு விநயமாகப் போற்றப்பட்டுவந்தது. பிள்ளைகள் பெரியோர்முன் வாய்புதைத்து நிற்கவேண்டியவர்கள். அவர்களுக்கு முத்தங்களும் விளையாட்டுப்பொருட்களும் கொடுத்தால் பழுதாய்ப்போய்விடுவார்கள். அவர்களுடைய அற்பகுற்றத்துக்குத்தானும் பெற்றோரும் உவாத்திமாரும் அடியும் இடியுமே வழங்குவார்கள். தொமஸ் மோறுவோ தமது பிள்ளைகளுக்கு எப்போதாவது ஆகக்கடினமாய்ப் பாவித்தகோல் மயில் இறகே! என்னே சுத்தவாளர்களது குழந்தைத்தன்மையான விவேகத்தின் வல்லமை. மோறு தம்மைத் தமது பிள்ளைகளின் நிலைக்குச் சமமாகத்தாழ்த்தி, அவர்களுக்கு ஓர் சிநேகிதனாகவும், ஓர் விளையாட்டுத் தோழன் போலவும் நடப்பார். ஆயினும் தம்மை மக்களுடைய சகல ஆசார சகல வந்தனைக்குமுரிய பிதாவாகவும் காட்டிக்கொள்ள அறிந்திருந்தார். அவர்களுடைய பாடங்களில் கவனஞ்செலுத்தினதுபோல விளையாட்டுகளிலும் செலுத்துவார்.

அவர் பிள்ளைகளைச் சீராட்டிப் பாராட்டிவந்தபோதிலும் அவர்களிடம் குற்றம் குறைகள் கண்டால் வேண்டியபடி கண்டியாதுவிடார். அவர் வளர்த்துவந்த அநாதபிள்ளை மார்கறெற் ஜிக்ஸ் ஒருமுறை அறிக்கையிட்டதாவது: தான் அவரது மனத்தை நோகபண்ணாமல் நடக்கத் தெண்டித்துவந்தபோதிலும் சிலசமயங்களில் தான் ஏதோஒரு அற்பகுற்றம் செய்துவிட்டதுபோல பாசாங்குபண்ணுவாளாம். ஏனென்றால் மோறு குற்றஞ் செய்த ஒருபிள்ளையைக் கண்டிக்கும்மாதிரி எவ்வளவோ இனிதாயும் அன்போடு அறிவுறுத்துவதாயுமிருக்குமாம். அவர் அவர்கட்குச் சொல்லுவார்:— "என் அதிபாக்கியங்களே, நீங்கள் இப்போது மோட்சம் அடைவதற்கு வெகு பாடுபடத் தேவையில்லை. ஏனெனில், இங்கே சகலரும் உங்களுக்கு நல்லஉபதேசம்செய்கின்றனர், சகலரும் நன்மாதிரிகை காட்டுகின்றனர். நற்குணத்துக்கு உபகாரமும் துர்க்குணத்துக்கு சிட்சையும் கிடைக்கிறதைக் காண்கிறீர்கள். ஆதலால் நீங்கள் மோட்சத்திற்கு மோவாய்க்கட்டையிற் பிடித்துத்தானும் கொண்டுபோகப் படுகிறீர்கள்" என்பார். அவர் தம் மகார் ஆர்வத்தோடு இடையறாமற் கல்வியயில்வதில் கண்ணுங்கருத்துமாய் இருக்க[illegible] புகழ்பெற்ற ஆசானமாரையும் அவர்கட்குப் பாடஞ்சொல்லிக்கொடுக்க நியமித்து வைத்தார்.

## சுதேச வர்த்தமானம்

**தீபாவலியும் புடவையும்** — வருகிற கார்த்திகைமாசம் 3-ந்திகதி இந்துக்களின் தீபாவலி வருவதை முன்னிட்டு அரசாங்கசபையிலே காங்கேசன்துறை, மன்னார்ப் பிரதிநிதிகளான திரு. எஸ். நடேசன், திரு. ஜே. தியாகராஜா என்பவர்கள் கைத்தொழில்-வர்த்தக மந்திரிசபையாருடன் கலந்துபேசியதன் பலனாய், தீபாவலிக்கு முந்தியே அதாவது இந்த ஐப்பசிமாசக் கடைசிவாரங்களிலே 7-ம் 8-ம் 9-ம் இலக்கப் புடவைக்கூப்பன்கள்கொண்டு அவர்கள் புடவைகள்வாங்கிக்கொள்ள அனுமதிப்பதாக மந்திரிசபையார் வாக்களித்துள்ளாரென அறிகின்றோம்.

**ஏக்கருக்கு நூறுபுசல்** — மாத்தளை தெற்குப்பிரிவில் நடந்தேறிய நெற்செய்கைப் போட்டியிலே வெற்றிபெற்ற கமக்காரருக்குப் பொதுசன பாதுகாப்புப்பகுதி உபகரித்த 500 ரூபாவும் சமீபத்திலே அங்கு நிகழ்ந்த பகிரங்ககூட்டத்தில் பரிசிலாக வழங்கப்படலாயிற்று. இந்தப்போட்டியில் கலந்துகொண்ட 1099 பேரில் 14 பேரே பரிசில் பெற்றனர். இப்போட்டியிலே அங்கு அரைஏக்கர் வயல்ஒன்றில் பதர் இல்லாமலே $49\frac{1}{4}$ புசல் நெல்விளையலாயிற்று. அதாவது ஒரு ஏக்கருக்கு 100 புசல் வீரையிலே விளைந்திருக்கிறது.

**தச்சுத் தொழிற்சாலைகள்** —இராணுவ தொழில்களிலிருந்து சமீபத்திலே விடப்படவிருக்கின்ற திறமைவாய்ந்த தொழிலாளிகளுக்குப் பிழைப்புக்கொடுக்குமாறு அரசினர் கொழும்பிலும், காலியிலும் உடனே இரு தச்சுத்தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவிருக்கின்றனர். பிந்தக் கண்டியிலும், மற்றும் பிரதான பட்டினங்களிலும் இவைபோலும் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கத் தீர்மானமாயிருக்கிறது.

**தற்காலிக கிளாக்குமார்**— தந்திப்பகுதியிலே தற்காலிகமாக வேலைகொள்ளப்பட்டுவந்த ஒருதொகையான கிளாக்குமார் இம்மாசஇறுதியிலே வேலையைவிட்டு விலகுமாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். ரையர், பெற்றோல் பகுதிகளில் வேலைகொள்ளப்பட்டுவந்த ஒரு பெருந்தொகையான கிளாக்குமார் வருகிற மார்கழிமாச முடிவிலே தாங்களும் விலகவேண்டி வருமென எதிர்பார்க்கின்றனர்

**நகரசங்க கேள்வி**—யு சி. எனும் பட்டினசங்கத்தை இப்போது கொண்டுள்ள யாழ்ப்பாணமும், நுவரெலியும் அதனை முனிசிப்பாலிற்றி எனப்படும் நகரசங்கமாக மாற்றித்தர வேண்டுமென்று மனுப்பண்ணியிருக்கின்றன. அதனால், இதுசம்பந்தமாய் ஓர் புதியசட்டம் ஆக்கப்பட்டுக் 'கெசற்'றிலே பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

**புதிய பி.ஏ. பட்டதாரி**—இலங்கைச் சர்வகலாசாலை சமீபத்தில் நடத்திய பீ. ஏ. பட்ட பரீட்சையில் திரு. ஏ. எட்வாட் என்பவரும் ஒருவராய் அரங்கேறியிருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் சம்பத்திரிசியார்கல்லூரிப் பழைய மாணவர்களில் ஒருவர். யாழ்ப்பாணப் பட்டினசங்க பிரதம கிளாக்குவான திரு. ஜோண் அல்பிறெட் அவர்களின் புதல்வர்

## குகையிலே கண்டெடுத்த திருப்பண்டங்கள்

உத்துவாங்கந்தை எனும் ஓர் சிறுகிராமத்திலுள்ள வீடொன்றைத் தரிசிப்பதற்குப் பெருந்திரளான சனங்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தவீட்டு எசமானுக்கு அர்ச். அந்தோனியார் சொர்ப்பனத்திலே தரிசனமாகித் திருப்பண்டங்கள் சில புதைத்துவைத்திருக்கும் இடத்தைப்பற்றி அறிவித்தாராம். ஆனால், அம்மனுஷன் தான்கண்ட சொர்ப்பனத்தை அக்கறைபண்ணாது அதைப் புறக்கணித்துவிட்டுச் சிலகாலம் சும்மா இருந்துவிட்டான். இரண்டாம்முறையாகவும் அர்ச். அந்தோனியார் அம்மனுஷனுக்குத் தரிசனையாகித் திருப்பண்டங்கள் புதைத்து வைக்கப்பட்ட குகையை அறிவிக்கவே, அவன் பயப்பிராந்தி கொண்டவனாய்க் கனவில் அறிவிக்கப்பட்ட குகைக்குச் சென்று அங்கு நிலத்தைவெட்டிப் பரிசோதித்துப்பார்த்தான். பார்த்தவிடத்து ஒரு யானைத்தந்தச் சிலுவையும், செபமாலை ஒன்றும், மருத்தெண்ணெய் நிறைந்த போத்தல்ஒன்றும், இடத்துக்கிடம் தூக்கிச்செல்லக்கூடிய சலவைக்கல் பீடம் ஒன்றும், சலவைக்கல்லாற்றானே அமைக்கப்பட்ட தேவமாதாவின் சுரூபம், அர்ச். சூசையப்பர் சுரூபம் ஒவ்வொன்றும், அறையுண்ட சுரூபம் ஒன்றும், உடைந்த பூப்போச்சி ஒன்றும் நிலத்துட் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டெடுத்தான். இவைகளைத்தவிர வேறு திருப்பண்டங்களும் அங்கு வெளிப்படலாயின.

சலவைக்கற்பீடத்தில் அமைக்கப்பட்ட ஒரு இலாச்சியினுள் குருசுகள் வரவணிக்கங்களும் இருந்தன. நிலத்துள்ளிருந்து எடுக்கப்பட்ட நாலுஅங்குல நீளமுள்ள பாடுபட்ட சுரூபத்தின் ஒருஅருகில் தசைநிறமானதும், அரைக்கரைவாசி கண்டிப்பானதுமான ஏதோ ஒரு வஸ்துஇருந்தது. அதிலிருந்து சந்தனக்குழம்பின் வாசனைபோலும் வாசனை வீசிக்கொண்டிருந்தது. அர்ச். அந்தோனியார் இன்னும் ஒருமுறை அந்த மனுஷனுக்குத் தரிசனையாகி அக்குகையுள் வேறு திருப்பண்டங்களும் இருப்பதாகவும், அவற்றுள் ஒன்று ஒரு செபமாலை என்றும், அந்தச் செபமாலையை அவன் தன்கழுத்தில் எப்போதும் அணிந்துகொள்ள வேண்டுமென்றும் அறிவித்தனராம். மேலும் ஆசா. யோசேவாஸ் முனீந்திரன் உபயோகித்து வந்த ஊன்றுகோல் ஒன்று சிலாபத்தில் ஒருமரப்பேழைக்குள் இருப்பதாக அர்ச். அந்தோனியார் அம்மனுஷனுக்கு அறிவித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

சொர்ப்பனத்திலே அறிவிக்கப்பட்டபடி, அம்மனுஷன் குகையில் புதைக்கப்பட்டிருந்த செபமாலையையும் கண்டெடுத்தான். அது செவ்வந்தி மாணிக்கக்கற்களால் அமைக்கப்பட்ட செபமாலைமணிகளை உடையது. அதனால் அவன் ஆனந்தபரவசமும், சொல்லரிய ஆச்சரியமுங் கொண்டான். ஒரு சுரூபத்தின் ஒருபக்கத்தில் உள்ளே குடையப்பட்டிருந்த ஓர்சிறு துவாரத்திலிருந்து ஒரு வகையான சிவப்புத்தூள் வெளியேஉதிர்ந்து கொட்டுண்ணுவதும் அவதானிக்கப்பட்டது. குகையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் எல்லாவற்றையும் தன்வீட்டில் மூன்றுமாசத்துக்கு வைத்திருக்க வேண்டுமெனவும், அதன்பின்னர் அவ்வகளை ஒருஆலயத்தில் வைத்துப் பேணும்படி ஒருகுருவானவரிடம் கொடுத்துவிடவேண்டுமெனவும் அர்ச். அந்தோனியார் அம்மனுஷனுக்குக் கட்டளைபண்ணியிருந்தாராம். நோயாளருக்கு உதவக்கூடியதான அந்தச் சிவப்புத்தூளையும், மருத்தெண்ணெயில் அரைவாசியையும் அவன் தனவீட்டில் வைத்திருக்கும்படியும், செபமாலையையும் அவன்தானே வைத்திருக்கும்படியும் அர்ச். அந்தோனியார் அறிவித்தார். அம்மனுஷன் செபமாலையை இப்போது தன்கழுத்தில் அணிந்துகொண்டே திரிகின்றான்.

தனது சொர்ப்பனத்தையும், அச்சொர்ப்பனத்தில் அறிவிக்கப்பட்ட பொருட்களைத் தான்எடுத்து வைத்திருப்பதையும் அவன் உத்துவாங்கந்தைக் கட்டளைக்குருவாகிய வண. ஜெறேமியாஸ் பொன்னன்டோசுவாமியாருக்கு அறிவித்திருக்கிறான். அவர் காலிமேற்றிராணியாருக்குச் சகலத்தையும் அறிவிக்க, மேற்றிராணியார் இப்போது விசாரணை நடத்துகின்றார். திருப்பண்டங்களைக் கண்டுபிடித்தவன் பையகாலையைச்சேர்ந்தவன். அவன் ஒரு சமுசாரி. ஞானமான கத்தோலிக்கன்.

N. D. George Herat
Sunday Times

## பொதுவர்த்தமானம்

### வத்திக்கானிலுள்ள பிரதிநிதிகள்

ஜேர்மனியும், யப்பானும் யுத்தத்தில் தோல்வியடைந்த பின்னரும் வத்திக்கானிடமாய் இருந்துவந்த அவற்றின் பிரதிநிதிகள் இன்னுமே வத்திக்கானின் பாதுகாப்பில் இருந்துவருகிறார்கள். வத்திக்கானிடமாக யப்பானின் விசேஷ பிரதிநிதியான கென் ஹறடா என்பவர் சமீபத்திலே பாப்பரசரின் விசேஷ பேட்டி பெற்றாரெனப் பரந்தசெய்தியே யப்பான் வீழ்ச்சியடைந்தபிறகு அவரைப்பற்றிக் கேள்விப்பட்ட முதற்செய்தியாகும். ஏண்ஸ்ற் வொன் வெய்ஸக்கர் அவர்களைத் தலைமையாகக்கொண்டு வத்திக்கானிடமாயுள்ள நாஸிய ஸ்தானபத்திய அங்கத்தவர்கள் மூவரும் அங்கேயே இருந்துவருவதும் பலருக்கு அதிசயம் தருகின்றது. இவர்களை வெளியேற்றிவிட வேண்டுமென்று நேசஅரசுகள் கேட்கிறகாலம்வரையில் வத்திக்கான் இவர்களைப் பாதுகாத்துவரவிருக்கின்றது.

### யப்பானிய புதிய பிரதம மந்திரி

யப்பானிய மிதவாதகட்சித் தலைவரான 73 வயசுடைய பறன் ஷிடேஹறு என்பவர் யப்பானிய புதிய பிரதம மந்திரியாகச் சென்ற சனிக்கிழமை சக்கிரவர்த்தியாலே நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார் தமது மந்திரிசபையின் பிரதம நோக்கம் யப்பானை ஆதீனப்படுத்தியுள்ள அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதும், யப்பானிய மக்களுக்கு உணவும், இல்லிடமும் உதவுவதுமேயென இவர் தெரிவித்திருக்கின்றார். இவர் முன்இருமுறை யப்பானிய பிறதேசகாரிய மந்திரியாயிருந்து பிரித்தானி, அமெரிக்க ஐக்கியதேசம், ருஷியா சீனாவுடன் சிநேகபான்மையாய் வாழவேண்டுமென்ற கொள்கையை அனுசரித்தும், மஞ்சூரியாவிலே யப்பானின் ஆக்கிரமிப்புக்கொள்கையை எதிர்த்தும் வந்தார்.

### பெரும் பாக்கியவதியான தாய்

அமெரிக்க ஐக்கியதேச பிலடெல்பியா நகர் வாசியான ஸ்ரீமதி லூயிஸ் ஷீறர் எனும் கத்தோலிக்க சீமாட்டியின் பத்துப் பிள்ளைகளுமே குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமாராய் விளங்குகின்றார்கள். இவர்களில் ஐந்துபுதல்வர் கார்மேல்சபையையும், இரு புதல்வரும் புத்திரிகள்மூவரும் தொமினிக்குவின் சபையையும் சேர்ந்தவர்கள். புதல்வர்களில் ஒருவர் வண. லூயிஸ் ஷீறர் சுவாமியார். சீனாவிலே ஓர் மிஷனரியான இவர் யப்பானியராலே காவலில் வைக்கப்பட்டிருந்து விடுதலையாகிச் சுவநாடுசென்று சமீபத்திலே தமது தாயாரைச் சந்தித்திருக்கின்றார். குடும்ப வாழ்க்கை சம்பந்தமான அமெரிக்க தேசிய கத்தோலிக்க மகாநாடு இந்தக் கத்தோலிக்க சீமாட்டிக்கு "1945-ம்ஆண்டின் அமெரிக்க கத்தோலிக்க தாய்" எனும் மகிமைநாமம் சூட்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மிருக உணவுச்சாலை

பெரியதெரு, யாழ்ப்பாணம்

மிருகங்களின் உணவுவகைகளுக்கு வருந்தவேண்டாம்

எம்மால் விற்பனை செய்யப்படும் தவிடு, கடலை, உளுந்து பருப்பு, கோதுமை முதலியவற்றை மாவாக்கிக்கலந்தஉணவை உங்கள் குதிரை, ஆடு, எருது, பசு முதலியவற்றிற்குத் தீனியாக வைத்து அதனால் லாபத்தையும் நன்மையையும் அடையுங்கள்.

விலைவிபரங்களுக்கு எமக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

த. இராசரத்தினம்
(லோ லைபிறேறியன்)
புரொப்ரைட்டர்



# சத்தியவேத பாதுகாவலன்

1945-ம் ஆண்டு
ஐப்பசிமாசம் 12-ந்திகதி


## சோல்பெறி கொம்மிஷன் அறிக்கை

இலங்கைக்குப் புதியதோர் அரசியல் வழங்கும் விஷயமாய்ச் சோல்பெறி பிரபுவைத் தலைமையாகக்கொண்டு இங்கு விஜயஞ்செய்து, பரக்க விசாரணை செய்து பலரும் அளித்த சாட்சியங்களைப் பெற்றுத்திரும்பிய கொம்மிஷனின் அறிக்கை வெளியாகும் நாளைப் பொதுவாக இந்நாட்டுமக்களும், சிறப்பாக அரசியல்வாதிகளும் வெகுஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த அறிக்கை கடைசியாய்ச் சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் வெளிவாலாயிற்று. அதனால் இலங்கையின் வருகால அரசியல்சம்பந்தமாய்க் கொம்மிஷன் செய்துள்ள முக்கிய சிபாரிசுகளை முந்த எடுத்துக்காட்டுவதே முறையாகும். செனேற்சபையென்றும், சனப்பிரதிநிதிகள் சபையென்றும் இரு சபைகளைக்கொண்ட "கபினெற்" எனப்படும் மந்திரிசபைஆட்சி இலங்கைக்கு அருளப்படவேண்டுமென்று கொம்மிஷன் சிபாரிசுசெய்திருக்கிறது. அவற்றிலே செனேற்சபை 30 அங்கத்தவர்களையும், சனப்பிரதிநிதிகள்சபை 101 அங்கத்தவர்களையும் கொண்டிருக்க வேண்டியன. சனப்பிரதிநிதிகள்சபையென்று அறியப்படுவதான முதற்சபை அங்கத்தவர்கள் 101 பேரிலும் 95 பேர் தொகுதிப்படி வாக்காளர்களாலேதேர்ந்தெடுக்கவும், எஞ்சிய 6 பேரும் பேர்க்க, ஐரோப்பிய பிரதிநிதிகளாக மகாதேசாதிபதியாலே நியமனஞ்செய்யவும்படுவார்கள். இச்சபைப் பிரதிநிதிகள் பாளிமேந்து அங்கத்தவர்களென்று அழைக்கப்படுவார்கள். இடையிலே கலைக்கப்பட்டாலன்றி மற்றப்படி இச்சபை தான்கூடிய முதல்நாளிலிருந்து ஐந்து வருடம் நீடித்திருக்கும். செனேற்சபையென்று அறியப்படுவதான இரண்டாவதுசபை அங்கத்தவர்கள் 30 பேரிலும் 15 பேர் முதலாவது சபையால் தெரியவும், ஏனைய 15 பேரும் மகாதேசாதிபதியால் நியமிக்கவும்படுவார்கள். இவ்வங்கத்தவர்கள் செனேற்றர்களென்று அறியப்படுவார்கள். ஓர் மந்திரிசபை பாளிமேந்துக்குப் பொறுப்புவாய்ந்திருக்கும். மந்திரிமார்களிலே மகாதேசாதிபதி நியமனஞ்செய்கிற ஒருவரே பிரதம மந்திரியாய் இருப்பார். ஏனைய மந்திரிமார்களைப் பிரதம மந்திரியாது சிபாரிசின்பேரிலே தேசாதிபதி நியமனஞ்செய்வர். சர்வசனவாக்குரிமை இப்போதுபோலவே இருந்து வரும். தேர்தல்தொகுதிகளை வகுக்கவென்று மகாதேசாதிபதியால் மூவரைக்கொண்ட ஒரு கொம்மிஷன் நியமிக்கப்படும். இவர்களில் ஒருவர் அதன் தலைவராய் இருப்பர். இயன்றமட்டும் இவர்கள் அரசியலில் சம்பந்தப்படாதவர்களாய் இருப்பர். இக்கொம்மிஷன் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாகாணத்தையும் ஒருதொகையான தேர்தல் தொகுதிகளாக வகுக்கும். அங்ஙனம் வகுக்கும்போது ஓர்பகுதியில் ஓர் சாகியத்தையோ அன்றேல் சமயத்தையோ சேர்ந்தவர்கள் அதிகமாயிருந்தால் அவர்களுக்கே பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியவகையில் கவனஞ்செலுத்தவேண்டியது. பிரதம நீதியாசரைத் தலைவராகவும், வேறிருவரை அங்கத்தவர்களாகவுங்கொண்ட நீதிப்பரிபாலன கொம்மிஷன்ஒன்று அப்பரிபாலன சம்பந்தமான நியமனங்களைச்செய்யும் பொறுப்புடையதாயிருக்கும். மகாதேசாதிபதியால் நியமனம்பெறும் மூவரைப் பகிரங்சேவைக் கொம்மிஷன் அடக்கியதாய் இருக்கும். மறுசாகியத்தினருக்கும், சமயத்தவர்களுக்கும் இல்லாத கஷ்டங்களையும், தடைகளையும் எந்த ஒருசாகியத்தினருக்கும் சமயத்தினருக்கும் உண்டுபண்ணக்கூடியவகையிலே எந்தவிதமான ஒரு சட்டத்தையும் இலங்கைப் பாளிமேந்து இயற்றப்படாது. அதேபோல் மறுசாகியத்தினருக்கோ அல்லது சமயத்தினருக்கோ இல்லாத 'விசேஷ உரிமைகள் அல்லது சௌகரியங்களை ஒருசாகியத்தினருக்கு அல்லது சமயத்தினருக்கு அளிக்கக் கூடிய சட்டத்தையும் இலங்கைப்பாளிமேந்து இயற்றப்படாது. இவ்வாறான பல சிபாரிசுகளையும் அடக்கியுள்ள சோல்பெறிகொம்மிஷனின் அறிக்கையை ஆராய்வாகப் படிக்குமிடத்து' இலங்கை அரசியல்திருத்த விஷயமாய் மந்திரிமார் கேட்டவைகளே அதில் பெரும்பாலு மடங்கியுள்ளன எனலாம். அதனால் கொம்மிஷனர் நாலாயிரம் மைல்தாண்டி இலங்கைக்குவந்து விசாரணை நடத்தியதில் கண்டபலன் என்னவென்று ஒருகேள்விபிறப்பது நூதனமன்று. ஆனால், கொம்மிஷனின் சிபாரிசுகளை மேற்கொண்டு நியமனஞ்செய்யப்படும் மகாதேசாதிபதியும், அவரால் நியமிக்கப்படும் பிரதம மந்திரியாரும் நீதிவழுவாது நிலைதவறாதுநடந்துகொள்வார்களானால் இலங்கை அரசியல் ஓர் அளவிலே சிறக்குமெனக் காத்திருக்கலாம்.

## திருச்செபமாலைப் பத்தி

யேசுசபையைச்சேர்ந்தவண. உறோ சுவாமியார் வேளைக்கேற்ற, சுட்டிப்பான விடைஅளிப்பதில் மகாவீரர். நகைச்சுவை ததும்ப எவரோடும்அலுப்பின்றிச் சம்பாஷணை நடத்துவதிலும் அநுபவம் மிக்கார். இவர் ஹம்பேர்க் நகரில் தமதுநண்பரான பாதிரியார் ஒருவரைச் சந்தித்தவிடத்து "நண்பரே! உமது சபையைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் செந்தளிப்பில்லாது இருப்பதை நான் பலகால் அவதானித்திருக்கிறேன். எப்போதும் குருவிய முகத்துடனும், மனரம்மியமில்லாத போக்குடனும் அவர்கள் நடமாடுகிறார்கள். நான் சொல்வதை ஒப்புக்கொள்ளுகிறீரா?" என்றார். "நீர் சொல்வதிலே ஓரளவில் உண்மை உண்டென்பதை நான்மறுக்கமாட்டேன். ஆனால் காரியத்தை வெளியிட்ட நீர் அதன் காரணத்தையும் சொல்லமாட்டீரா?" என்றார் பாதிரியார். "காரணமா? இதோ சொல்லுகிறேன் கேளும். ஒரு வீட்டில் தாய் இருக்குமட்டும் பிள்ளைகளுக்கு எப்போதும் ஆனந்தம். அவர்களுக்கு எவ்வித கவலையுமில்லை. அவர்கள் சந்தோஷமாய்ச் செந்தளிப்பான முகத்துடன் நடமாடுவார்கள். ஆனால், நீங்களோ உங்கள் சபையிலிருந்து கிறீஸ்தவர்களின் அருமைத்தாயை வேண்டாமென்று புறக்கணித்துத் தள்ளிப்போட்டீர்கள். எங்கள் திருச்சபையிலோ அப்படியல்ல. தேவதாய் எங்களுக்கும் தாயென நாம் மதித்துச் சங்கித்து அவரைநேசித்து வந்தித்து வருகின்றோம். ஆகையினலே நாங்களெல்லாரும் மனப்பூரிப்பும் செந்தளிப்பும் உள்ளவர்களாய் இருக்கிறோம்" என்றார் உறோ சுவாமியார்.

திருச்சபையும் தேவதாயாரை "எங்கள் சந்தோஷத்தின் காரணம்" என்று அழைக்கிறதன்றோ! எங்கள் சந்தோஷத்தின் காரணமாயிருக்கும் திருத்தாயாரை நாம் எல்லாரும் சங்கித்து, அவருக்கு நன்றியறிதல் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். இனி தேவதாயாருக்கு எங்கள் வணக்கத்தைச்செலுத்தி, அவர்மட்டில் நன்றியறிதல் காண்பிப்பதற்கு மிகவும்வாய்ப்பானவழி திருச்செபமாலைப் பத்திமுயற்சியேயாகும். குருமார் செபித்துவரும் கடமைச்செபங்களுள்ள மந்திரமாலையில் செபமாலைமாதாவின் திருநாளுக்குக் குறிக்கப்பட்ட பாகத்தில் இந்த உண்மையைத் திருச்சபை மிகவும் தெளிவாகப் படிப்பிக்கின்றது. "அதிபரிசுத்த தேவதாயாருக்கு மகா உவப்பான இந்தச் செபமாலைப் பத்தி மூலமாக நாம் அத்திருத்தாயாரை இடைவிடாது சங்கித்து வருவோமாக" என்பதுவே திருச்சபையின் வாக்கு. இப்பத்திமுயற்சியானது தமக்கு மிகவும் உவப்பானதென்பதைத் தேவதாயார்தாமே அர்ச். சாமிநாதருக்கு அறிவித்து, அத்திருத்தொண்டர் மூலமாகச் செபமாலைப்பத்தியைப் பரப்புவித்திருக்கிறார். லூர்து பதியிலும், பத்திமாநகரிலும் தேவதாயார் காட்சி அருளினபொழுதும் செபமாலைப்பத்தியைச் சகல கிறீஸ்தவர்களும் அநுசரித்துவரும்படி ஏவியிருக்கிறார்.

இன்னும் செபமாலைப்பத்தியில் நாம் ஓதும் செபங்களை அவதானிக்குமிடத்தும் இப்பத்திமுயற்சியானது தேவதாயாருக்கு மகாபிரீதி உண்டுபண்ணுமென்பது தெளிவாகின்றது. யேசுநாதசுவாமிதாமே நேரில்படிப்பித்தபரமண்டலமந்திரத்தை அதில் சொல்லுகின்றோம். பரிசுத்த பரமதிரீத்துவத்தை தோத்திரிக்கின்றோம். ஆனால், அதில் நாம் பலமுறை மீண்டும்மீண்டும் ஓதும் பிரியதத்தமந்திரந்தான் மாதாவுக்கு மகாபிரீதியை உண்டுபண்ணுவது எனலாம். பிதாவாகியசருவேசுரன் தமது சாதாரண தூதர்களிலே ஒருவரை அல்ல, அதிதூதனாகிய தேவவல்லோனாகும் கபிரிகேல் சம்மனசானவரை மரியம்மாளிடம் தமது தூதுவனாக அனுப்புகிறார். நீ நசரேத்து ஊருக்குப் போ; அங்கு மரியம்மாளை நமது நாமத்தினால் வாழ்த்து; நாம் சொல்லும் இந்த மங்களத்தைச்சொல்லி வாழ்த்து; நமது சோபனவாழ்த்து இதுவென மரியம்மாள் விளங்கும்படி வாழ்த்து என்று பணித்து அதிதூதனாகிய அந்தத் தேவவல்லோனை அனுப்பிவிடவே, அவரும் கன்னிமரியம்மாளிடம்சென்று அவரை ஆசரித்து "மங்களம் பிரியபிரசாத பூரணியே ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்று வாழ்த்துகிறார். வீரமாமுனிவர் சிறப்பாகப் பாடியிருக்கிறபடி:

'பொய் யகன்றெழுவ தெய்வப் பூரணவோகையாளே
ஐயகன்றுவப்பில் நாதன் அணிந்துவாழ் நெஞ்சத்தாளே
வையகம்வைகும் வாய்ந்த மாதரில் எண்ணிலாகி
துய்யகம் பொலியப்பூத்த சுந்தரிவாழி

என்று வாழ்த்துகிறார்.

இந்த வாழ்த்துரையை மாதா அடிக்கடி கேட்பது, அவர் சருவேசுரன் தமது எளிமையான நிலைமையைக் கருணையுடன் நோக்கி, தம்மை மகாஉன்னதநிலைக்கு உயர்த்திவைத்திருப்பதற்காக அவரைத் தோத்திரிப்பதற்கு ஏதுவாகுமல்லவா? சகல தலைமுறைகளும் தம்மைப் பாக்கியவதியென வாழ்த்துவதற்குச் சருவேசுரன் கருணைகூர்ந்ததைத் தேவதாயார் நினைத்து நினைத்து அவருக்கு அஞ்சலிசெய்வதற்கும் ஏதுவாகும் அன்றோ? இப்படிப்பட்ட வாழ்த்துரையினலே நாம் தேவதாயாருடன் ஏகோபித்துப் பரமதிரீத்துவத்தைத் தோத்திரிப்பதற்கும் ஏதுவாகும் அன்றோ? ஆகவே, இப்படிப்பட்ட வாழ்த்துதலை அடிக்கடி கூறுவதாகிய செபமாலைப் பத்தியானது தேவதாயாருக்கு மகாப்பிரீதியை உண்டுபண்ணுமெனத் திருச்சபை போதிப்பது எத்துணை உண்மையான ஒரு போதனை? தேவதாயாரின் உண்மையான மக்களாக இருக்கவிரும்புகிறவர்களிலே எவர்தான் அத்திருத்தாயாரை ஆனந்திப்பிக்க மனமில்லாதிருப்பர்? அவருக்கு ஆனந்தம் உண்டுபண்ணுவதற்கு இந்தச் செபமாலைப்பத்தி மிகவும் வாய்ப்பான சாதனமாக இருப்பவும், அதனை அனுசரியாது அதில்அக்கறைகொள்ளாதிருப்பவர்கள் உள்ளபடி தேவதாயாரை நேசிப்பவர்களா?

செபமாலைப்பத்தியானது தேவதாயாருக்கு மகாபிரீதியுள்ளதென்பதற்கு இன்னும் ஒருநியாயம் உண்டு. இந்தப் பத்திமுயற்சியை அனுசரிக்கும் தமது மக்கள் எல்லாரும் உத்தம கிறீஸ்தவர்களாகச் சீவிப்பதற்கு இது மிகவும் சுலபமானவழி; அறிவாளிகளும் அறிவிற்குறைந்தவர்களும் பெரியோரும் சிறியோரும் எளிதாய்க் கைக்கொள்ளக்கூடியவழி என்பதைத் தேவதாயார் நன்கு அறிவார். நாம் உத்தம கிறீஸ்தவர்களாகச் சீவிப்பதற்கு யேசுநாதசுவாமியை அறிந்து, அவருடைய திருப்போதகத்துக்கிணங்கக் கிறீஸ்த புண்ணியங்களை அனுசரித்தல் அவசியம். செபமாலைப்பத்தியை முறைப்படி அனுசரிப்பவர்கள் பதினைந்து காரணிக்கங்கள் மூலமாகவும் யேசுநாதசுவாமியின் சீவியவரலாறுகள் முழுவதையும் சுருக்கமாக அறிந்துகொள்ளலாம். அதே காரணிக்கங்களைக் கருத்தாகத் தியானிப்பவர்கள், கிறீஸ்தவர்கள் அனுசரிக்கவேண்டிய புண்ணியங்களை இலேசாகக் கற்றுக்கொள்ளலாம். களிகூர்ந்த காரணிக்கங்களிலே விசுவாசத்தையும், மோக்ஷானந்த காரணிக்கங்களிலே நம்பிக்கையையும்,வியாகுலகாரணிக்கங்களிலே தேவநேசத்தையும் கற்றுக்கொள்ளலாம். தேவதாயார் எலிசபேத்தம்மாளைச் சந்தித்த காரணிக்கம் பிறர்சிநேகத்தைப் படிப்பிக்கும். மங்களங்கேட்ட காரணிக்கத்திலே தாழ்மை கற்பு எனும் புண்ணியங்களைக் கற்றுக்கொள்ளலாம். ஏனைய காரணிக்கங்களிலிருந்தும் இவ்வாறே பலவேறு புண்ணியங்களைப் படித்தறியலாம். ஆதலால் பரிசுத்த தேவதாயாருக்கு மகாபிரீதி உண்டுபண்ணும் இப்பத்திமுயற்சியை எங்களால் இயன்றளவு நாள்தோறும் அனுசரித்து வருவோமாக. காரணிக்கங்களைத் தியானித்துக்கொண்டு செபித்தல் பிரதானம் என்பதை மறந்துவிடப்படாது. நாங்கள் தியானஞ்செய்ய அறியோமே யெனச் சொல்வது வீண்பதர்ப்பேச்சு. பிறர் எங்களுக்கு உண்டுபண்ணிய கஷ்டநஷ்டங்கள், நிந்தை அவமானங்களைப்பற்றி இரவும் பகலும் தியானிக்க நன்கு அறிவோம். யேசுநாதசுவாமியின் சீவியவரலாறுகளைச் சற்றுச்சற்றுத்தியானிக்க ஏன் நம்மால்இயலாது?

## சுதேசவர்த்தமானம்

மலாய்நாட்டுப் பிரதிநிதி—வடமாகாண ஏசன்றரான திரு. சி. குமாரசாமிஅவர்கள் மலாய்நாட்டிலே இலங்கைஅரசின் பிரதிநிதிபதவி அளிக்கப்பெற்றிருக்கின்றார். மலாய்நாட்டிலுள்ள இலங்கைமக்களின் நிலைமையை விசாரணைசெய்து அவசியம் தேவைப்படுவாருக்குக் கஷ்டநிவாரணம் அளிப்பதும், அங்கு யப்பானியரது ஆட்சிகாலத்தில் அவர்களுடன் ஒத்துழைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்களெனக் குற்றஞ்சாட்டி இராணுவ நீதிஸ்தலத்தில் விசாரணைசெய்யப்படக்கூடிய எவருக்கும் வழக்குமுறையில் துணைசெய்வதுமே இவரின் கடமையாகும். உதவிப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு. ஏ. ஐ. இராசசிங்கம் சென்ற சனிக்கிழமை ஆகாயமார்க்கமாய் அங்கு சென்றிருக்கின்றார். இவர் அங்கு பிரதிநிதிக்கும், அவர் துணைஉத்தியோகஸ்தர்களுக்கும் வேண்டிய இடவசதிகள் ஒழுங்குபண்ணுவார். துணைஉத்தியோகஸ்தர்களில் நான்கு சிவிலுத்தியோகஸ்தர்களும், முடிக்குரிய ஓர் நியாயவாதியும், இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரும் அடங்குவார்களாம்.

மாட்டுரோகம்—பூநகரி, கிளிநொச்சிதுணுக்காய் எனுமிடங்களிலே தலைகாட்டியிருந்த மாட்டுரோகம் நீங்கிவிட்டதாயும் மீசாலையிலும், சாவகச்சேரியிலும், இலைப்பைக்கடவையில் இருகிராமங்களிலும் இன்னும் ரோகம் நடப்பதாகவும் அரசினர் பிரசித்தஞ்செய்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோல்பேறி அறிக்கை — இலங்கை அரசியற்திருத்த சம்பந்தமாய்ச் சோல்பேறி கொம்மிஷனின் அறிக்கை சென்ற செவ்வாய்க்கிழமை லண்டனிலும், கொழும்பிலும் ஏககாலத்தில் வெளியிடப்படலாயிற்று. அன்று கொழும்பிலே அவ்வறிக்கை அச்சிடப்பெற்ற ஆயிரத்துக்குமேற்பட்ட பிரதிகள் பிரதம காரியதரிசி கந்தோரில் விற்பனையாயின.

ஏக்கருக்கு 80 புசல்— சாஸ்திரமுறைகளைக் கையாண்டு நெல்விளைவை அதிகரிக்கச்செய்யும் நோக்கமாய் வதிளைப்பகுதியிலே சென்ற மகாபோகத்தில் நெற்செய்கைப் போட்டியொன்று நடத்தப்பட்டது. அதிலே வெற்றிபெற்ற 126 கமக்காரருக்கும் 4,500 ரூபா பரிசிலாக வழங்கப்பட்டது. இப்போட்டியின் விளைவாய்ச் சிலவயல்களில் ஏக்கருக்கு 80 முதல் 100 புசல் நெல்வரையில் விளைந்தது. எங்கும் சராசரியாய் ஏக்கருக்கு 40 புசல் விளையலாயிற்று.

மலாய கஷ்டநிவாரணம் — சிங்கப்பூரிலும் மலாய்நாட்டிலும் பெருங்கஷ்டநஷ்டங்களுக்குள்ளாய் வருந்தும் இலங்கைமக்களுக்கு உதவிசெய்யும் வழிவகைகளை ஆலோசிப்பதற்காகச் சென்ற 6-ந்வ சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளைச்சங்க ஆதரவில் டக்றர் எஸ். சுப்பிரமணியம் அவர்களது தலைமையில் யாழ்ப்பாணமக்களின் பகிரங்ககூட்டமொன்று நடந்தேறியது. அதிலே கஷ்டநிவாரணநிதி சேகரிப்பதற்கும், மற்றும் ஒழுங்குகளைச்செய்வதற்குமாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகவும், டக்றர் எஸ். சுப்பிரமணியம் அவர்களை அக்கிராசனராகவும், ஐம்பது பிரபலஸ்தர்களை அங்கத்தினராகவுங்கொண்ட ஓர் கொம்மிற்றி ஆக்கப்பட்டிருக்கிறது.

சீமெந்துத் தொழிற்சாலை—இலங்கையிலே சீமெந்துசெய்யும் விஷயமாய் ஆராய்ச்சிநடத்தி[illegible]ன நிபுணர்கள் தங்கள் அறிக்கையை [illegible]வெளியிட்டிருக்கின்றனர். இந்நாட்டின் ந[illegible]மையைக்கருதிச் சீமெந்துத் தொழிற்சா[illegible] ஒன்றை அமைப்பது விரும்பத்தக்கதெ[illegible]றும், பலதிட்டங்களையும் [illegible]பரிசோதனை செய்ததன்விளைவாய் பலநியாயங்களையிட்டும் அத்தொழிற்சாலையைக் காங்கேசன்துறையில் ஸ்தாபிப்பதே உத்தமமென்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

ஆகாயத் தபாற்சேவை — இலங்கையிலிருந்து றெஜிஸ்றர்பண்ணப்படாத கடிதங்களும், போஸ்ற்காட்டுகளும் ஆகாயத்தபால்மூலம் இனிமேல் மலாய்நாட்டுக்கு அனுப்பப்படலாமெனச் சென்ற புதன்கிழமை பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது

நேரமாற்றம் — இந்திய அரசாங்கம் நிகழும் ஐப்பசிமாசம் 15-ந்திகதி தொடக்கம் இந்தியாவிலே முன்போல நேரத்தை மாற்றிவிடத் தீர்மானித்திருக்கிறது

மன்னார், வவுனியா உப ஏசண்டர்— மன்னார் உப ஏசண்டராகத் திரு. என். கியூ. டயஸ் அவர்களும், வவுனியா உப ஏசண்டராகத் திரு. எம். எல். டி. கஸ்பேரிஸ் அவர்களும் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள்.

## திரு இருதயநாதரின் சின்னச் சிலுவைப்படைவீரர் சபையின் காரியஸ்தருக்கு

சிலுவைப்படைவீரர் சபையின் இரண்டு பிரதான பாதுகாவலர்கள்ஆகிய அர்ச். மார்கறெற் மரியம்மாளும், சின்னத்தெரேசம்மாளும் அதிகம்அதிகமாகச் சபையாரால் அறிந்து நேசிக்கப்பட்டுவருகிறார்கள். இம்மாசம் 3-ந்திகதி சின்னத்தெரேசம்மாளின் திருநாள் வந்துபோனது. 17-ந்வ அர்ச். மார்கறெற் மரியம்மாளின் திருநாள் வரவிருக்கிறது. இவர்தான் திருஇருதயத்தின்இரகசியங்களைஉலகுக்குஅறிவித்தவர்.

இந்த இரண்டாம்திருநாள் வருவதைப் பற்றிச் சபையார் எல்லாருக்கும் எமது காரியஸ்தர்கள் எவ்வெவ்விடங்களிலிருந்தாலும் அவ்விடங்களிலுள்ள சபையாருக்கு நினைப்பூட்டும்படி அவர்களைத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். கூடுமானால் இத்திருநாளைப் பத்திவிநயத்துடன் கொண்டாடுதற்குக் கட்டளைச்சுவாமிமாருடைய ஆலோசனையையும் உதவியையும் காரியஸ்தர் பணிவாகக் கேட்டுக்கொள்வார்களாக. திருநாளுக்குக் குறிக்கப்பட்ட திகதி வசதியில்லாவிட்டால்அடுத்தஞாயிற்றுக்கிழமை அதனைக் கொண்டாடலாம்.

எல். யோசேப்புச் சுவாமியார் O.M.I.
தலைவர்

இ. தநகுவிறதர் O. M. I.
லிகிதர்

## யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் வருடாந்தகூட்டம் வருகிற கார்த்திகைமாசம் 4-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணிக்குக் கதலிக்கிளப் மண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். யாதும் பிரேரணைகள் கொண்டுவர விரும்புகிறவர்கள் அவற்றை நிகழும் ஐப்பசிமாசம் 26-ந்திகதிக்கு முன்னரே சங்கத்தின் கௌரவ காரியதரிசிக்கு அனுப்பிவைக்குமாறு தயவாக வேண்டப்படுகின்றார்கள்.

## "அந்தரங்க நோக்கங்கள்"

ஐயா! 7-10-45-இல் வெளியான "ஈழகேசரி" இதழிலே, "இலவசக் கல்வி" யென்ற தலையங்கத்தைத்கொண்ட ஆசிரிய வசனத்தில் "இப்பொழுது திருவாங்கூர் சமஸ்தானத்திலும், ஆரம்பக்கல்வி தேசபாஷையிற் கட்டாயமாகவும் இலவசமாகவும் சமஸ்தானஅரசினர் அளிக்க முன்வந்துள்ளார். இக்கல்விமுறையை அந்தச் சமஸ்தானத்திலுள்ள கத்தோலிக்க கிறீஸ்தவர் மிகப்பெலமாக எதிர்க்கின்றனர். அங்கும் தங்கள் அந்தரங்க நோக்கங்கள் பழுதடைகின்றனவென்றே கிறீஸ்தவர்கள் தலையை உடைக்கின்றனர்" என்று அதன் ஆசிரியர் நளினமாக வரைந்து அவர்களுடன் தமதுதலையையும் அடித்துஉடைத்து அமளிப்பட்டுக்கொள்ளுகின்றார். "அந்தரங்க நோக்கங்கள்" என்று சிலேடையாக எழுதியிருக்கும் "ஈழகேசரி" ஆசிரியர் அவ்விதம் எழுதிய தமது அந்தரங்க நோக்கத்தை—கத்தோலிக்க கிறீஸ்தவர்கள்மட்டிலே தாம் கொண்டுள்ள அந்தரங்க மனப்பான்மையைக் காட்டாமற்காட்டிவிடுவான் இந்தவேளை ஓர்சந்தர்ப்பத்தைக் கண்டுகொண்டமைபெரிதும்மகிழ்ச்சிக்குரியதே! நிற்க, திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆரம்பக்கல்வியைத் தாங்களே பொறுப்பேற்றுத் தேசபாஷையில் கட்டாயமாகவும், இலவசமாகவும் எல்லோருக்கும் அளிப்பதெனச் சமஸ்தான அரசினர் முடிவுசெய்திருப்பதைக் கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் ஒருபோதுமே எதிர்க்கவில்லை. ஆனால், அங்கே கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் ஆரம்பபாடசாலைகளை நடத்தமுடியாத ஒருநிலைமையை உண்டுபண்ணிவிடுவான் அச்சமஸ்தான தீவானாகிய சேர். சி. பி. இராமசாமி ஐயரென்ற தமிழ்நாட்டுப்பிராமணர்செய்த அந்தரங்க சூழ்ச்சியையே அவர்கள் மிகப்பெலமாக எதிர்க்கின்றனர் என்பதை 'ஈழகேசரி' ஆசிரியர் நன்கு அறிந்துகொள்வாராக! மேலும் அவர் "இலவசக் கல்வி" விஷயமாய்க் கல்விமந்திரியார் திரு. கன்னங்கராவுக்குப் புகழ்மாலை சூட்டியிருப்பது பாராட்டத்தக்கதே! ஆனால், 'ஈழகேசரி' யின் அதே இதழிற்றானே அதன் அரசியல் நிருபர் "பொதுத்தேர்தலுக்கு ஆள் பிடி" என்ற தலையங்கத்தின்கீழ் "கல்வி மந்திரி கன்னங்கரா இலவசக்கல்வித்திட்டமென்ற தமது மணியை வைத்துக்கொண்டு ஆள் சேர்க்கிறார்" என வரைந்து அவருக்குப் புகழ்மாலை சூட்டிவிட்டிருப்பதையும் 'கேசரி' ஆசிரியர் ஓர்கால் படித்துப்பார்த்து அதிலுள்ள அந்தரங்க நோக்கத்தையும் அறிந்துகொள்வாரென நம்புகின்றேன். சுபம்!

வண்ணை. எஸ். வாசகன்

## காலஞ்சென்ற E. இப்பொலிற் ஆசிரியர்

வடஇலங்கைக் கத்தோலிக்க தமிழாசிரியர் உலகில் ஓர் ஆணிப்பொன்நிகர்த்து இலங்கிய மாணிக்கச் சுடரொன்று இம்மாசம் 5-ந்திகதி வெள்ளிக்கிழமைகாலை மரணமென்னும் கார்மேகத்தால் மறையப்பெற்று மங்கியதாமென்ற அமங்கலசெய்தியானது அன்பர்கள் பலருக்கும் அணைகடந்த துயரசெய்தியாயிற்று. இப்பொலிற் ஆசிரியரை நினைக்குந்தோறும் அவரது செல்லப்பொழியும் இன்மொழிகளும் தீஞ்சுவைபொலியும் செவ்விய சம்பாஷணைகளும், ஞானப்போக்கும், வேதாபிமானமும், ஆசிரிய லட்சணமும் ஆதியவெல்லாம் அவர் மரணத்திரையில் மறைந்தும் மறையாதபான்மையாய் மனக்கண்முன் காட்சியளிப்பது ஓர் அதிசயமன்று இவர் ஓர் உத்தம கத்தோலிக்கராய், தமது உட[illegible]ராய், எவ[illegible] விளங்கியிருந்து இருபதுவருடகாலம் ஆசிரியத்தொண்டாற்றிப் பின்னர் சுகத்தாழ்வுற்று இளைப்பாறிக் கடந்த மூன்றுவருடங்களை அமைதியாகக்கழித்து, தமக்குண்டான வருத்தவேதனைகளைப் பொறுமையுடன்சகித்து அந்திய தேவதிரவியானுமானங்களைப்பெற்று அமலன்பதம் சேரலாயினா. இவர் பிரேதசேமமானது அன்று சாயந்தரம் திரளான இனசனர் ஆசிரியர் சிநேகிதர் கூடியசமுகத்திலே மூப்புச்சுவாமியாராகிய மிகவண. ஜி. ஏ. குருசாமி சுவாமியாரைத் தலைமையாகக் கொண்டு குரவர் மூவர் துக்கசங்கீதம் பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாய் நடந்தேறியது. இவர் சமாதானத்தில் இளைப்பாறுவாராக.




சென்ற கஷ்டமான யுத்தகாலத்தில், உங்கள் கவலையையும், தேக ஆரோக்கியத்தையும் திடமைப்படுத்த நீங்கள் விற்றோ மதுரபானத்தில் வைத்த நம்பிக்கையை விற்றோ ஒருவாறு விருத்தி செய்தது ஒரு விசையாகிலும் உங்களை மனம் சோரவிடவில்லை இப்போ இந்த வெற்றிகரமான காலத்தில் உங்கள் இருதயங்களை பரிபூரண குளிர்மையாக்க எப்போதும் தயாராயிருக்கின்றது.

போலிப் பானங்களால் ஏமாந்து போகாதீர்.

விற்பனையாளர்:
எல். எஸ். இராசநாயகம்,
13, [illegible]விரிமுத்து முதலியார் றோட்,
யாழ்ப்பாணம்.

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணவாசியும், புத்தளத்தைச் சேர்ந்த மாம்புரிப்பகுதி அரசாங்க வைத்தியசாலை அதிபருமான, டக்றர் எம். வஸ்தியாம்பிள்ளை அவர்கள் ஐந்துவருடகாலச் சிறந்த சேவையின்பின் அளவெட்டிக்கு மாறிச்செல்வதையிட்டுச் சென்ற 4-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் மாம்புரிச் சுகாதார மண்டபத்தில் வண. மோரின் பீரில் சுவாமியாரது தலைமையில் அவருக்கு ஓர் பிரியாவிடைக்கொண்டாட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் பாடசாலைச் சிறார்கள் நடனங்கள்ஆடிப் பாக்கள்பாடிப் பூவாரம்புனைந்து வைத்திய தம்பதிகளை வரவேற்று மேடையி[illegible] அமர்த்தியபின் விற்பனவு உத்தியோகஸ்தரான திரு. ஏ. பெனடிற் அவர்கள் சுருக்கமாகச் சிலகூறினர். பின்னர் கற்பிட்டி றோ. க. தமிழ்க் கலவன்பாடசாலை ஆசிரியரான திரு. வ. சிமியோன்பிள்ளை எழுந்து பிரியாவிடைநாயகர் வைத்தியத்துறையிலும், பொதுநன்மை கருதியும் இப்பகுதிக்குச்செய்த அரும்பெரும் தொண்டுகளைப்பற்றி இனியதமிழ்நடையில் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்பால் கற்பிட்டிப்பகுதிப்பிரிவு அதிகாரி திரு. தம்பையா சாமுவேல் அவர்களாலும், நுரைச்சோலை அரசினர் தமிழ்ப்பாடசாலை ஆசிரியர் திரு. எஸ், விஸ்வலிங்கம் அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டபின் விலைபெற்ற பொருட்கள் அன்னார்க்கு உபகாரமாக வழங்கப்பட்டன. சிற்றுண்டி உபசரணையின்பின் ஞாபகார்த்தமாகப் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. அப்பால் டக்றர் அவர்கள் எழுந்து தம்மைக் கௌரவித்த அனைவர்க்கும் நன்றிசாற்றினர். பஜனைக் கச்சேரிகளும் நடாத்தப்பட்டதும் ஈற்றில் கிராமத்தலைமைக்காரர் திரு. ஜி. மரியாம்பிள்ளையவர்கள் வைபவத்தில் கலந்துகொண்ட யாவர்க்கும் வந்தனம்கூறினர். இராசவாழ்த்துப் பாடப்பட்டபின் பிரியாவிடைநாயகர்க்கும் அவரது பாரியார்க்கும் சுவாமியார் ஆசிஅளித்ததும் வைபவம் இனிதே நிறைவெய்திற்று.

கண்டுகளித்தோன்

—பிரித்தானியிலே மெய்டாவே எனுமிடத்திலுள்ள நரம்புச்சிகிட்சை ஆஸ்பத்திரியில் மூளையைப் பரிசோதிக்கும் கருவியொன்று நவமாக வைக்கப்பட்டிருக்கிறது. இது மனிதனின் மனதைப்பற்றிய விஷயங்கள் பலவற்றை வெளியிடுகின்றதாம். பார்வைக்கு இது சிறியதோர் றேடியோ செற்றைப்போல்இருக்கிறதாம்

## மரண அறிக்கை

இளவாலை, போயிட்டி வாசரான திரு. எம். பிலிப்புப்பிள்ளையின் மனைவியும், சிங்கப்பூர் றெயில்வேயில் உத்தியோகம் பார்க்கும் திரு. பி. எம். பெஞ்சமின், பாரப்பந்தா கட்டுப்பாட்டுவரிக் கந்தோரில் உத்தியோகம்பார்க்கும் திரு. பி. எம். யோசேப் என்பவர்களின் தாயாருமான மேரிப்பிள்ளை என்பவ சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து எவ்வித சிகிட்சைக்கும் குணப்படாது கடைசித்தேவதிரவியானுமானங்களைக் குறைவறப்பெற்றுத் தனது இல்லத்தில் (550 டவுடென் றோட், பாரப்பந்தா, மலாயா) 1944-ம்ஆண்டு கார்த்திகைமாசம் 27-ந்திகதி திங்கட்கிழமை காலை தனது புத்திரர் இருவருப் இருமருமக்கும்சமுகமாக அமைதியாய் நித்திரைசெய்பவபோல் தனது ஆத்துமாவைப் படைத்தோன்கரத்தில் ஒப்படைத்துக் காலஞ்செல்லலாயினு. இவவின் பிரேதம் மறுநாள் 28-ந்திகதி செவ்வாய்க்கிழமையாலை கட்டளைக்குரவரான வண. எல். நோறீஸ் சுவாமியார் துக்கசங்கீதம் பாடிச்செல்ல பாரப்பந்தா அர்ச். ஆரோக்கியமாதாகோவில் கொண்டுசென்று அந்திமசடங்குகள் நிறைவேறியபின் அவ்வூர் கத்தோலிக்க சேமக்காலையில் பூமதானம் செய்யப்பட்டது. இவவின் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைவதாக.

பி. எம். யோசேப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளு சங்கதிகள்

—யப்பானிய யுத்தகுற்றவாளிகள் விசாரணை செய்யப்படுமாறு ஆஸ்திறேலியாவுக்குக் கொண்டுபோகப்படவிருக்கிறார்கள். இவர்களை விசாரணை செய்வதற்கென்று ஆஸ்திறேலிய அரசாங்கம் விசேஷ நீதிஸ்தலம் ஒன்றை ஏற்படுத்தவிருக்கின்றது.

—ஐக்கியதேசங்களின் யுத்தகைதிகளாயும், காவலில் வைக்கப்பட்ட பொதுசனராயும் யப்பானிலே 32,407 பேர் இருந்ததாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் 30,805 பேர் தங்கள் நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். 1,039 பேர் இறந்துபோயினார்கள்.

—1942-ம் ஆண்டு சிங்கப்பூரைக் கைப்பற்றிய யப்பானிய படைகளை அணிவகுத்து நடத்திய ஜெனறல் ஹோபன் யமாஷிற்று எனும் யப்பானிய சேனாபதி அங்கு சீனர்களுக்குச்செய்த நிஷ்டூரங்களுக்காக இன்னுஞ்சில தினங்களிலே பிலிப்பைன் தீவுக்குக் கொண்டுசென்று விசாரணை செய்யப்படவிருக்கின்றார்.

—சிங்கப்பூரிலே யப்பானிய இரகசியப் பொலிஸ் தலைவனாயிருந்தவனும், வாலில்லாக்குரங்கை ஒத்தவனுமான ரொமினகா என்பவன் தனது அதிகாரமும், உடையும் நீக்கப்பட்டு அங்கு ஓர் சிறைச்சாலையிலே அடைத்துவைக்கப்பட்டிருக்கிறான். இவன் முதலாம் நம்பர் யுத்தகுற்றவாளியாக விசாரணைசெய்யப்படுவான்.

—யப்பான் பவளத்துறையைத்தாக்கி யுத்தத்தில் இறங்கியபோது 5,300 ஆகாய விமானங்களைக் கொண்டிருந்தது. ஆனால், அது தோல்வியுற்றுச் சரணாகதியடைந்தபோதோ 11,000 விமானங்களைக் கொண்டிருந்ததாக இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் தோல்விக்குக்காரணம் கடற்படை நிர்மூலமாக்கப்பட்டமையே.

—பேர்லின்நகர் வீழ்ச்சியடையப்போகும்வேளை நாஸிய தலைவர்களில் ஒருவரான டக்றர் கோயபெல்ஸ் ருஷியாவுடன் சமாதானம்செய்ய முயற்சித்தாரென்றும் அவரது முயற்சி அனுகூலப்படாமையால் தற்கொலைசெய்துகொண்டாரென்றும் இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது.

—அணுச்சக்திக் குண்டைக் கண்டுபிடித்துச்செய்ய ஒத்தாசைபுரிந்தவர்களில் புறொபெசர் நீயெல்ஸ் போர் எனும் தேனிய விஞ்ஞானசாஸ்திரியும் ஒருவர். ஜேர்மனியர் தென்மார்க்கை ஆக்கிரமித்ததும் இவர் அங்கிருந்தும் ஓர் மீன்பிடிபடகில் பிரித்தானிக்குத் தப்பியோடினர்.

—வரப்போகும் மாரிகாலத்திலே பிரித்தானியமக்களுக்கு உதவியாக 325 கோடி ரூபா பெறுமதியுள்ள உணவுப்பொருட்களையும், புடவைகளையும் யாதுவிலையும் வாங்காமலே அவர்களுக்குக் கையளிக்கும் ஓர்திட்டத்தைப்பற்றி அமெரிக்க பிரசாதிபதி ஆலோசித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

—யுத்தத்திலே வெற்றிபெறுவதில் பிரித்தானி பங்குபற்றிச் செய்துள்ளவைகளுக்கெல்லாம் நன்றியினதும் அனுகூலதையினதும் ஓர் அறிகுறியாகக் கடன்-குத்தகைத் திட்டத்தின்கீழ் எஞ்சியிருக்கும் பொருட்களையும் பிரித்தானிக்குக் கொடுக்க அமெரிக்கவரசு கருதுகின்றது

—யுத்தத்தின்போது பிரித்தானியிலே அமெரிக்க சேனைகளுக்கென்று சேமித்துவைத்த உணவுப்பொருட்கள், பிறபொருட்களில் அநேக கோடிரூபா பெறுமதியான சாமான்கள் இன்னும் அங்கே எஞ்சியிருக்கின்றன. இவைகளையும் பிரித்தானியமக்களுக்குக்கொடுக்க அமெரிக்கவரசு யோசிக்கின்றது.

—யானை லத்தியிலிருந்து கடுதாசி செய்யும்முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கடுதாசி புல்லிலிருந்து செய்த கடுதாசிபோலவே இருக்கிறதாம். புத்தப்புதிய லத்தியிலிருந்து கடுதாசி செய்யுமிடத்து அது நல்ல உரப்பாயும் நிறம் மஞ்சள்கலந்த் வெண்மையாயும் இருக்கிறதாம்.

—ஒரு யானை ஒருநாளைக்குப்போடும் லத்தியின்நிறை 75 றுத்தல் வரையிலாம். அது கழுவிஉலர்த்திக் கொதிக்கவைத்துக் கூழாக்கப்படுகிறது. பின்னர் இந்தக்கூழிலிருந்து 20"×15" அளவில் 250 கடுதாசித்தாள்கள்செய்யமுடியுமாம். அதனால் ஆனை லத்திக்கும் நல்லகாலம் பிறந்திருக்கிறது.

—மத்தியதரைக்கடல் பிரதேசங்களின் ஆதிக்கவிஷயமாய் ருஷியாவுடன் பிரித்தானி போர்செய்யலாம். ஆகையால் அணுச்சக்திக்குண்டு இரகசியங்களை அமெரிக்கவரசு பிரித்தானியின் சத்துருவாகக்கூடிய ருஷியாவுக்குத் தெரிவிக்கப்படாதென்று நியூயோக் "டெயிலி நியூஸ்" பத்திரிகை கூறுகின்றது.

## வின்சென்ற் டீ போல் சபை யாழ்ப்பாணம்

### அர்ச். சூசையப்பர் பந்தியின் 1944-ம் ஆண்டுக்கான 38-ம் வருட அறிக்கைப்பத்திரம்

1944-ம் வருடம் மார்கழிமாசம் 31-ந் திகதியோடு முடிவான வருடத்தில் செய்யப்பட்டவேலையின் அறிக்கையைக் காரிய அங்கத்தவராகிய நாங்கள் சென் வின்சென்ற் டீ போல் சபை உபகாரிகளுக்கும் அபிமானிகளுக்கும் வெகு விநயமாய்ச் சமர்ப்பிக்கின்றோம்.

**அங்கத்துவம்:**—இப்போ எமது காரிய அங்கத்தவர்களின் தொகை 28. சென்ற 46 வாராந்தக் கூட்டங்களுக்கும் சராசரி 18 பேர் சமுகங்கொடுத்திருக்கிறார்கள்.

**வரவு செலவுக்கணக்கு:**—இவ்வருஷம் எமதுவரவு முந்தியவருஷத்திலும் 582 ரூபா 49 சதத்தால் அதிகரித்திருக்கிறது. காலத்தின் கஷ்டத்தை உணர்ந்து எமது உபகாரிகளுடையவும் அபிமானிகளுடையவும் மனங்களை எமதுமட்டில் அதிக [illegible]ார குணங்காட்டுமாறு ஏவிவிட்ட தேவபராமரிக்கையே இதற்கு முழுதுங்காரணம். நல்லதேவன் அவர்களுக்கு உந்நதகைம்மாறு வழங்குவாராக. இப்பணத்தைக் கொண்டு 52 பதியப்பட்ட குடும்பங்களுக்கு வாராந்த உதவியும், சிறியோரும் பெரியோருமான 550 பேர்வழிகளைக்கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்குத் தருண உதவியும் வழங்கலானோம் சில உதவியற்றவர்களுக்கு வீடுவேயவும், சிற்சிலரின் பிரேதசேமத்திற்கும், வேறு சிலர் சிறுமுயற்சிகள்தொடங்கவும் உதவி செய்தோம். இதன்றிச் சில வறியபிள்ளைகள் முதல்நன்மை பெறுவதற்கு உடுப்பு[illegible] தயாரித்துக்கொள்ளவும், வேதஅனுசரணைக்குத் திரும்பவும் கொண்டுவரப்பட்ட ஒழுங்கீனமான இரண்டு வறிய குடும்பங்களுக்கு வேண்டிய உடுப்புகள் தேடிக்கொள்ளவும் தாராளமாகப் பண உதவி புரிந்தோம்.

**ஏழைகளைத் தரிசித்தல்:**—நாம் உதவி புரிந்துவரும் ஏழைகளின் இல்லங்களுக்கும், எமது ஞானஉதவியையும் நற்புத்திமதிகளையும் தேடிநிற்கும் குடும்பங்களின் இல்லங்களுக்கும் செய்யும்வழமையான சந்திப்புகளை ஒழுங்காய்ச் செய்துவந்திருக்கிறோம். எல்லாமாக 4416 சந்திப்புகள் செய்யப்பட்டன.

**எமது மதுவிலக்குச்சபை:** — இச்சபையானது தனது வருடாந்த பொதுக்கூட்டத்தை இம்முறைகூட்டியபோது பழைய அங்கத்தவர் தமது வாக்குத்தத்தங்களைப் புதுப்பிக்க, வேறுசிலர் புதிதாய் அதில் சேர்ந்துகொண்டார்கள்.

**எமது பத்திக்கூட்டங்கள்:**—எமதுபந்தியால் பணஉதவிசெய்து பரிபாலிக்கப்பட்டுவரும் அர்ச். சூசையப்பர்கூட்டமும், பாலியர் சற்பிரசாதக்கூட்டமும், அவைகளின் பழையதலைவரும் ஸ்தாபகருமான வண. குருசோவிறதரவர்கள் வயோதிபசுகத்தாழ்வால் இளைப்பாறவேண்டி வந்ததாலே நெடுங்கால அநுபவமுள்ள எமது கட்டளைச்சுவாமியார் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன. கட்டளைச்சுவாமியாரின்பேரால் வண. தீயோப்பிள்ளைச் சுவாமியார் அர்ச். சூசையப்பர் கூட்டத்தை நடப்பித்துவருகிறார்.

**எமது இலவச புத்தகசாலை:**—சென்ற வருடத்தில் 477 புஸ்தகங்கள் வாசிக்கப்பட்டன. உண்மையாக எமது புத்தகசாலை நல்ல புதுப்புஸ்தகங்கள் இல்லாதிருக்கின்றது. ஆகவே எமக்குப்பணஉதவி புரிந்து அல்லது பாவிக்கப்பட்ட தமிழ் அல்லது ஆங்கில புஸ்தகங்களை எமக்கனுப்பி இந்த நல்லவேலையில் எமக்கு உதவி புரியுமாறு எமது நண்பர்களை வேண்டுகின்றோம்.

**அர்ச். அந்தோனியார் தரும அப்பம்:**—இந்தக் கத்தோலிக்க வழக்கமானது எமது நாட்டில் நன்குபலப்பட்டுவருகின்றது. அர்ச். அந்தோனியார் ஏழைகளின்மட்டில் மிகவும் உதாரகுணமாய் இருப்பவர்களுக்கு எப்போதும் தவறாத அடைக்கலமாய் இருக்கிறார் என்பதற்கு இம்முறை எமக்குவந்த தொகையாகிய 2044 ரூபா 78 சதமே சான்றாகின்றது.

**நத்தார்த் தண்டல்:**—இம்முறை நத்தார்த்தண்டல் எமக்கு 367 ரூபாவைக் கொணர்ந்தது. எமது உபகாரிகள் சகலருக்கும் அதற்காகத் துதி கூறுகின்றோம். இதைக்கொண்டு 108 பேர்வழிகளுக்குச் சீலைஉதவிப் பெரிய ஆஸ்பத்திரியிலுள்ளவர்களுக்கு நத்தார் உபசரணையும் நடத்தலானோம்.

**இலவச உடுப்பு[illegible]:**—எமது ஞானத் தலைவர் பழைய [illegible] விண்ணப்பத்தின்பயனாக அநேக பழைய உடுப்புகளைப்பெற்றுத் தேவையான வறியோருக்கு உதவக்கூடியவர்களானோம். இவ்விஷயத்தில் எமக்கு உதவியாகவந்த ஒவ்வொருவருக்கும், வீடுவீடாய்த்திரிந்து இவைகளைச்சேகரித்த எமது பந்தியின் வாலிபருக்கும் எமது நன்றித்துதி உரித்தாகுக. (தொடரும்)


# பஸ்றியன்
அன் கம்பெனி லிமிட்டெட்

## புதிய விலாசம்

எல்லா வாடிக்கைக்காரர்களுக்கும், மொத்த சில்லறை பேர்மிட் வைத்திருப்பவர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்வதுயாதெனில்:-

எங்களுடைய
பதிவுசெய்யப்பட்ட
கந்தோரையும், ஸ்தாபனத்தையும்
கொழும்பு பழைய சோனகர் தெரு 81-ம் இலக்கத்திலிருந்து
கொழும்பு புதிய சோனகர் தெரு
87 & 89 இலக்கங்களிலிருக்கும்
"பஸ்றியன்ஸ்"
கட்டிடத்திற்கு மாற்றிவிட்டோம்

இந்த கம்பெனிக்கு அனுப்பப்படும் கடிதப்போக்குவரத்து முதலியவைகள், மேற்குறிப்பிட்டுள்ள புதிய விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும்.

கொண்டாட்டவைபவங்கள், பொதுக்கூட்டங்கள்,
தேர்தல் பிரசாரங்கள், சங்கீதக்கச்சேரிகள்,
கோவில் விசேஷங்கள், இவைகளின்போது
ஒலிபெருக்கி அமைக்க விரும்புகிறீர்களா?
உங்கள் இடங்களில் மின்சார வசதி இல்லையே
என்ற கவலைவேண்டாம்
பஸ்றியன் கம்பெனி லிமிட்டெட்டைக்
கலந்து கொண்டால்
மின்சார வசதி இல்லாத இடங்களிலும், ஒலிபெருக்கி
வசதி செய்துகொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.


## மாதோட்டச் செய்திகள்

[நாட்டுத்தூதன் வரைவது]

ஐயா! தூதன் ஆரம்பத்திலே ஓர் ஆனந்த செய்தியை அறிவிக்கிறான். அஃதாவது: ஐந்துமாசங்களுக்குப்பிறகு அடம்பன் அரசினர் வைத்தியசாலைப் பிரதம வைத்தியராகத் திரு. ஆனந்தப்பா அவர்கள் வந்திருப்பதேயாம். திரு. ஆனந்தப்பா அவர்களின் நியமனத்தாலே தூதனுக்குண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்த ஆனந்தத்தை ஏனையோரும் அடைவாரென்பதில் ஐயமில்லை. மேலும் இங்குள்ள சிலபிரதான தெருக்கள் திருத்தமுறுவதைக் காண்பதும் மற்றுமோர் ஆனந்தமாகும்.

மன்னார்த் தமிழ்ஆசிரியர்சங்கம் ஆவசிய கருமங்களிலெல்லாம் உற்சாகத்துடன் முயற்சித்து மேலதிகாரிகளுடன் துணிந்துவாதாடிப் பலநலன்களையும்பெற்று நாட்டுக்கு நன்மைசெய்துவருவது பாராட்டத்தக்கது. இச்சங்கத்தின் முன்னேற்றத்தால் இப்பகுதியிலுள்ள பாடசாலைகளும் நன்கு முன்னேற்றம்பெறுமென்று திட்டமாகக்கூறலாம். இவ்விதம் ஆசிரியர் சங்கம் முன்னேற்றம் பெறுவதன் மூலகாரணம், இப்பகுதி வித்தியாதரிசி திரு. இராமலிங்கம் அவர்களின் நற்பண்புநிறைந்த பரிபாலனமுறையென்றே தூதன் எண்ணுகின்றான்.

மாதோட்ட ஐக்கியவிளைபொருள் வியாபாரவிருத்திச்சங்கமும் முயற்சிகொண்டு பணியாற்றத் தொடங்கியிருப்பது வியக்கற்பாலதே. மாந்தைப்பகுதியிலே சென்றமாச ஈற்றில் இது தன் முதல்வேலையைத் தொடக்கியிருக்கின்றது. இந்நாட்டுக் கமக்காரரின் பெருந்தொகையைக்கோரி நிறுவப்பட்டுள்ள இச்சங்கத்திலே கமக்காரரெல்லாம் ஒருவர் தப்பாது உரிமைப்பணத்தைக்கட்டிப் பெருந்தொகைசேர்த்துப் பெரும்பயனடைய முன்வருவார்களாக! இதன் நயசுகம் இப்போது நன்கு தெரியாவிடினும் பிறகு அரிசிவிலை இறங்குங்காலத்தில் நன்கு தெளிவாகும். ஆதலின் இப்பகுதிக் கமக்காரரெல்லாம் காலதாமசமின்றி இதில் சேருவார்களாக. இந்த ஐக்கியஇயக்க முயற்சியில் நமது (டி. ஆர். ஓ.) காரியாதிகாரிகளும், மற்றும் சில பொதுநன்மை விரும்பிகளும் சிரத்தை எடுத்துவரக்கண்டு தூதன் அக்களிப்புக் கொள்ளுகிறான்.

இங்குள்ள சனத்தலைவர்களும், உத்தியோகஸ்தர்களும் பொதுவாக நாட்டின் முன்னேற்றத்திற்காக மக்களுடன் ஐக்கியம்பூண்டு ஒத்துழைத்துவருவது மகிழ்வைத்தரக்கூடியது. ஆனால், சில்லறை உத்தியோகஸ்தர்கள் சிலர் கைலஞ்சப்பிரியத்தாலோ அன்றேல் கூட்டாளித்தனம் குன்றிவிடுமென்னும் கோழைத்தனத்தாலோ பொதுநலங்கருதி அரசினரால் ஸ்தாபிக்கப்படும் பொதுத்தலங்களில் பொதுநன்மைக்குப் பங்கமாக ஏற்படும் தீச்செயல்களைத்தடுத்து அகற்றுவதற்குப்பதில் ஒன்றுமறியாத பரமசாதுக்களைப்போல் கண்களை இறுகமூடிக்கொண்டிருக்கின்றனர். சென்ற ஆவணிமாசத்திலே மணற்குளப் புகையிரதஸ்தானத்தில் குடிகாரன் ஒருவனால் பிரயாணிகள் அனுபவித்த கஷ்டமும் பிறவும் இவர்களுக்குத் தெரியாதா? இதையிட்டு அப்புகையிரதஸ்தானத் தலைவர் எவ்வித நடவடிக்கையும் எடாவிடினும் நாட்டுத்தொண்டர்கள் வெளிகொண்டு கருமம்பார்ப்பார்களென்று எண்ணியே தூதன் ஆறுதல் அடைகிறான். சுபம்.

—1942-ம் ஆண்டு சிங்கப்பூருக்கப்பால் பிறின்ஸ் அவ் வேல்ஸ், றிப்பல்ஸ் எனும் பிரித்தானிய பாரிய யுத்தக்கப்பல்களை ஆழ்த்துவதற்கான தகவலை யப்பானியருக்குத் தெரிவித்து உளவாயிருந்தாரென்ற சந்தேகத்தின்பேரிலே கெம்பாளிஎனும் ஐரோப்பியர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffan, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises Main Street Jaffna, on Friday, October 12, 1945.